## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW–16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ் | Caste | : | |
| S/o. | : | தனபாலன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 11.02.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் தாரமங்கலம், பவளத்தானூரில் இலங்கை அகதிகள் முகாமில் குடியிருக்கிறேன். நான் தாரமங்கலம் பஸ்நிலையத்தில் மயூரி டிஜிட்டல் ஸ்டுடியோ என்ற பெயரில் போட்டோ ஸ்டுடியோ நடத்தி வருகிறேன்.

08.01.2023ம் தேதி மாலை தாரமங்கலம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் குமார் என்பவரின் விவசாய கிணற்றில் ஏதோ ஒன்று மிதக்கிறது அதை போட்டோ எடுக்க வேண்டும் என்று அழைத்தார். நான் அன்று மாலை அங்கு சென்றேன். அங்கு 6 துண்டுகளாக கொலை

செய்யப்பட்டு கிடந்த மணி என்பவரை காவல் துறையினரின் அறிவுரைப்படி நான் புகைப்படம் எடுத்தேன்.

அதன்பின்னர் மீண்டும் 11.01.2023ம் தேதி காலை 8.00 மணி அளவில் மறுபடியும் காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்தார்கள். செல்லான் என்பவரின் வீட்டிற்கு சென்று அவர் மணியை எவ்வாறு கொலை செய்து என்று காண்பித்தார். அதை போட்டோவும் வீடியோவும் எடுத்து நான் காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். கிணற்றிலிருந்து பிரேதத்தை எடுக்கும்போது எடுக்கப்பட்ட பிளாஸ்டிக் அரிசி சாக்குப்பை, சட்டை, ஒரு லுங்கி, ஒரு மரக்கட்டை மற்றும் துண்டு ஒன்றையும் புகைப்படும் எடுத்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

மேற்படி புகைப்படங்களை குறியீடு செய்வதற்காக அரசுத்தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.